**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 264/2015**
**வழக்கு சாட்சி. அ.சா.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பாலமுருகன் | **வயது** | : | 60 /2026 |
| **தந்தை பெயர்** | : | பரமசிவம் | **மாவட்டம்** | : | சிவகங்கை |
| **கிராமம்** | : | காரைக்குடி | **தொழில்** | : | காவல்துணை காண்காணிப்பாளர் ஓய்வு |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused Absent. Petition filed and allowed. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**தேதி : 26.02.2026**

**சாட்சியானவர் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**
**எதிரி/ எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சாலையின் அகலத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான், சாலையின் அகலம் சுமார் 20–30 அடி இருக்கும். விபத்து நடந்ததிலிருந்து எவ்வளவு நேரம் கழித்து விசாரணைக்காக சம்பவ இடம் சென்றேன் என்றால் மதியம் 1.30 மணிக்கு விபத்து நடந்தது, நான் சம்பவ இடத்திற்கு மாலை 5.00 மணிக்கு சென்றுவிட்டேன். விபத்தில் எதிரிக்கும் கடுமையாக காயம் ஏற்பட்டு தாடைகள் உடைந்தும், உடம்பில் பல இடங்களில் காயமும் காணப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு காயம் ஏற்பட்டது சம்பந்தப்பட்ட மருத்துவ சிகிச்சை ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்துபோன நபரில் மனைவியிடம் புகார் பெறாமல் ஏன் மூன்றாம் நபரிடம் புகாரை பெற்றுள்ளேன் என்றால் அவர் சம்பவத்தை நேரடியாக பார்த்ததால் புகாரினை பெற்றேன். இவ்வழக்கின் புகாரனது வாக்குமூலமாக பெறப்படாமல் புகார் மனுவாக காவல்நிலையத்தில் வைத்து எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2. சுமார் 2 மணிநேரம் காலதாமதமாகத்தான் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். இரண்டு வாகனங்களின் சேதங்களை பொறுத்தவரை இறந்துபோன நபர்தான் வாகத்தை வேகமாக ஓட்டிச்சென்று எதிரியின் வாகனத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளார் என்பது வாகன சேதங்களை பார்க்கும்போது தெரியவருகின்றது என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதியை சேர்ந்த நபர்களை யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் மாவடிக்கோட்டையை சேர்ந்த பாரதி மற்றும் ரஞ்சித் என்பவர்களை விசாரணை செய்துள்ளேன். புகார்தாரர் மற்றும் இளங்கோவன் எந்த வாகனத்தில் சென்றார்கள் என்பது புகாரில் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளதுபோல் எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற சாலையானது கடுமையான பள்ளங்கள் குழிகள் உள்ள சாலை என்றால் சரியல்ல. சாலைகள் சேதமடைந்திருந்தது என்றாலும், இறந்துபோன நபர் அதிவேகமாக வாகனத்தை இயக்கியதால் சாலையில் உள்ள பள்ளங்களில் நிலைதடுமாறி எதிரே வந்த எதிரியின் வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல.

3. எதிரி சரியான முறையில்தான் வாகனத்தை இயக்கினார் என்றாலும், வழக்கு சம்பவம் எதிரியின் கவனகுறைவினாலும், அஜாகிரதையாலும், அதிவேகத்தாலும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. குமார் மற்றும் இளங்கோ ஆகிய இருவரும் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக எதிரிக்கு எதிராக கொடுக்கப்பட்ட பொய்யான புகாரினை பொறுத்து முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதியறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் உண்மையாகவே எதிரி பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**
இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**